Registered as a News paper in Ceylon விலைசதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண், 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 158

யாழ்ப்பாணம் ஆடி 3 ... செவ்வாய்க்கிழமை (18-7-72)

JAFFNA COLLEGE ... LIBRARY
19 JUL 1972

பச்சைச் சந்தனம்

யந்திரத்தில்
அரைக்கப்பெற்ற நற்... சந்தனம்

பச்சைச் சந்தனம்
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

ஆ. இராசையா
அன் சன்ஸ்

(மருந்துக்கடை)

69, கே கே எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# தமிழரசு - காங்கிரஸ் ஓர் அமைப்பில் இணையும்

## திரு. இராசமாணிக்கம் தகவல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழர் கூட்டணியில் ஒரே இலட்சியத்துக்காக ஒன்றுபட்டிருக்கும் தமிழரசுக்கட்சியும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் விரைவில் ஒரே அமைப்பின்கீழ் வரும். அதற்கான சூழ்நிலை வந்துள்ளது. இருகட்சியினரிடையேயும் அத்தகைய மனோபாவம் ஏற்படத் தொடங்கிவிட்டது. தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் மேற்கண்டவாறு எமது நிருபரிடம் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியும் காங்கிரஸ்கட்சியும் இணைந்து ஒரு லட்சியத்துக்காகப் பாடுபட்டாலென்ன என்று கேட்டபோதே திரு. இராசமாணிக்கம் மேற்கண்டவாறு இரு கட்சிகளும் ஒன்றாக இணையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

23 ஆண்டுகளுக்குப் பிறகு இருகட்சியினரும் இப்போது தான் தூய மனப்பான்மையுடன் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் என்று சொன்ன திரு. இராசமாணிக்கம் மேலும் சொன்னதாவது:

தமிழ்க்காங்கிரஸ்கட்சியும் தமிழரசுக்கட்சியும் தமிழரின் நலனுக்காக இரண்டு வகையான லட்சியங்களை முன்வைத்துப் பாடுபட்டன.

சிங்களமக்களின் நல்லெண்ணத்துடன் சகோதரத்துவமாக ஐக்கிய இலங்கையை உருவாக்கத் தமிழ்க் காங்கிரஸ் முயற்சிகளை எடுத்தது.

இந்த நாட்டின் இணைப்பாட்சியில் சுயநிர்ணய உரிமை கொண்ட இனமாகத் தமிழினம் வாழவேண்டும் என்ற இலட்சியத்திற்காகத் தமிழரசுக்கட்சி பாடுபட்டுவந்தது.

இந்த இரண்டு கட்சிகளும்

[8-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை மக்கள் விருந்தோம்பலுக்கு பாராட்டு

கொழும்பு திங்கள் வாணிகச் சம்மேளனத்தில் இலங்கை மக்களின் விருந்தோம்பலைப் பாராட்டினார் ... கள் மிகவும் ... ளது. இந்தப் பண்பைக் காணவே வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகின்றனர் என்று சர்வதேச உல்லாசப்பிரயாணிகள் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் திரு லொனுட்டி பாராட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் தென் ஆசிய உல்லாசப் பிர... திரு. லொனுட்டி உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர், இலங்கை மக்கள் இதய பூர்வம் உடையவர்கள் என்றும் அவர்கள் மற்றவர்களுக்கு விரைந்து உதவும் பண்புடையவர்கள் என்றும் பாராட்டியதோடு இலங்கைக்கு சிறந்தோர் எதிர்காலம் உண்டு என்று சொன்னார்.

## கதிரிப்பாய் கொலை வழக்கு

# "ஐயாவின் உடல் துடிதுடித்தது அப்பொழுது சீவன் இருந்தது"

## கொலையுண்டவர் மகன் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ். துவக்குகள் என்றும் எனக்குத் தெரியும். இரட்டைக் குழல் பலபேர் வைத்திருக்கின்றார்கள். ஒற்றைக்குழல் துவக்குக்கும் இரட்டைக்குழல் துவக்குக்கும் எனக்கு வித்தியாசம் தெரியாது.

கதிரிப்பாய் கொலைவழக்கு விசாரணையின் போது எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஜே ஏ பி செரிபின் குறுக்கு விசாரணை செய்கையில் கொலையுண்டவரின் மகன் அடுமைராசா மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஜெயமாந்திரராஜு முன்னிலையில் நேற்று இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 23-6-70-ல் கதிரிப்பாயில் கன் முத்தலிங்கம், சி இரத்தினவடிவேல் என் சிவரத்தினம், ஆகியோர் கந்தவாமு கந்தையாவைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் 3-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ஜே ஏ பி செரிபும், அட்வகேட் ஆர் ஈ தம்பிரத்தினம் உதவியுடனும் புறக்டர் ஆர் ஜே செல்வரத்தினத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

1-ம் 3-ம் எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஆர். பி சபாரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

2-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஆர் ஈ. தம்பிரத்தினம் புறக்டர் ஆர் ஜே செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். 2-ம் எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே. குணரத்தினம் நியமிக்கப் பட்டிருந்தார்.

அரசாங்கத் தரப்பில் அட்வகேட் குமார் அமரசேகரா ஆஜரானார்.

குறுக்கு விசாரணையின் போது அடுமைராசா மேலும் கூறியதாவது: பொலிஸார் வந்ததும் சம்பவம் நடந்த இடங்களை காட்டினேன். எனது வாக்குமூலத்தை நோட்டத்தில் வைத்து பதிவு செய்தனர்.

ஒற்றை குழல் துவக்கு கண்டிருக்கிறேன். இரட்டை குழலை காணவில்லை. 2-ம் 3-ம் எதிரிகள் துவக்கை முறித்து வேறு தோட்டா போட்டதை நான் காணவில்லை.

2-ம் எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஆர் ஈ தம்பிரத்தினம் குறுக்கு விசாரணை செய்கையில் அடு

[8-ம் பக்கம் பார்க்க]

# 'தமிழருக்கென ஒரே கட்சி அமையவேண்டும்"

காங்கேசன்துறைப் பட்டினசபைத்தலைவர் திரு க. ஜெயபாலசிங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தமது இழந்த உரிமைகளைப் பெற வேண்டுமேயானால் சகல தமிழ்த் தலைவர்களும் தங்கள் கட்சிவேறுபாடுகளையும் மறந்து ஒருமித்து செயலாற்ற முன்வரவேண்டும். இதற்கு முதற்படியாக தமிழரசு தமிழ் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளும் கலைக்கப்பட்டு இவ்விரு கட்சிகளினதும் தலைவர்கள் பிரமுகர்கள் அங்கத்தவர்கள் அடங்கிய தனித்த ஒரு கட்சி ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில் நாம் செயலாற்ற ஆரம்பித்தால் நிச்சயம் வெற்றி காண்போம்.

தமிழர் ஒற்றுமை முன்னணி ஸ்தாபிக்கப்பட்டது வரவேற்கத்தக்க விஷயம். இரு கட்சிகளும் ஒன்றாக நீக்கப்பட்டு தமிழ் மக்களுக்கென தனித்தொரு கட்சி உதயமாக வேண்டும்.

இலங்கையின் புதிய அரசியல் அமைப்பு தமிழர்களின் அடிப்படை உரிமைகளை முற்றாக வழங்கவில்லை என்பதை எவரும் மறுப்பதற்கில்லை; ஆனால் அவ் உரிமைகளை நாம் எப்படிப் பெறுவது? நாம் ஆரம்பிக்கும் போராட்டங்கள் வெற்றியில் முடியும்வரை திட்டமிட்டு செயலாற்றி எமது திறமையையும் செய்து தனித்தும் இயக்கத் தலைவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் சரோஜாதேவி நடித்த
தாயைக்காத்த தனயன்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — நிர்மலா நடித்த
பூவா? தலையா?

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர்
★ ரவிச்சந்திரன்
சௌகார்ஜானகி வாணிஸ்ரீ நாகேஷ்
மற்றும் பலர் நடித்த
கே. பாலசந்தரின் மற்றுமோர்
வெற்றிப்படைப்பு
நான்கு சுவர்கள்

இன்று முதல்
லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப. 2-00.
மாலை 6-00 இரவு 9-30
காமினி பொன்சேகா - மாலினி பொன்சேகா
நடித்த
எஸ். ஆர். பிலிம்ஸ்
எதத்சூரயா அதத்சூரயா

21-ந் திகதி முதல்
சிவாஜி — சரோஜாதேவி
நடித்த
அருணோதயம்

வெற்றிகரமான 2—வது மாதம்
வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு காலை 10-30
★ சிவாஜி ★ ஜெயலலிதா
★ பாலாஜி ★ நிர்மலா
★ சோ ★ கருணாநிதி ★ தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்தது.
ஜெயார் மூவிஸ்
எங்க மாமா
[ஈஸ்ட்மென் வர்ணச் சித்திரம்]

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி கணேசன்
சௌகார்ஜானகி
நடித்த
காவியத் தலைவி

பவானி சினிமா
முனை
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30 மெட்னி
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
இருவர் உள்ளம்

சாந்தி சங்கானை
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 2-30
முத்துராமன் - விஜயா
சந்திரபாபு - தேவிகா
நடித்த
கண்ணே பாப்பா

வெல்லி சினிமா
(வல்வெட்டி)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
இரு மலர்கள்

தினசரி காலை 4-30
சனி, ஞாயிறு 10-30
Christopher Lee
in
DRACULA HAS RISEN FROM THE GRAVE

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p. m.
Burt Lancaster
Patrick O'Neal
in
CASTLE KEEP
(Panavision- Technicolor)
தினசரி 2-00, இரவு 9-45
எம். ஜி. ஆர் - விஜயகுமாரி
நாகேஷ் நடித்த
அல்லி

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Sat. Sunday 10-30
George ChaKirins
Lana Turner
in
BIG CUBE
(Color)

நாகம்ஸ் சினிமா
கல்முனை
தினசரி 6-30 இரவு 9-45
சனி ஞாயிறு 2-30
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
தாய்க்குத் தலைமகன்

வரி விளம்பரம்

சாப்டிங் 1 தொடக்கம் 7 அங்குலம் வரைக்கும் (M. S. Shafting) வேண்டிய அளவுகளில் மலிவாகக் கிடைக்கும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4853

வைத்தியம்
யாழ் ஹோமியோபதி கிளினிக், சகல நாட்பட்ட நோய்கள், சர்ம நோய்கள், குழந்தைகளுக்கான நோய்கள், மன நோய்கள் முதலிய நோய்களுக்கு விசேட சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் பரமசிவம், 25, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 4861

ஹோமியோ வைத்தியன்! இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் முத்திங்கள் வெளியீடு. ஹோமியோபதி டாக்டர்களின் கட்டுரைகளும் பிரசுரமாகும். வருடச் சந்தா ரூபா 5/-. விளம்பரங்களுக்கும் விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும். 131, நாவலர்வீதி, (ஐந்து சந்தி) யாழ்ப்பாணம். 4873

தவறிவிட்டது
உடுவில் கிராமசபைத்தலைவரின் மூக்குக்கண்ணாடி 16ந் திகதி கட்டணிக் கட்டடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் அல்லது உடுவில் கிராமசபையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 4880

## ரூ 50,000 கசாம்பு மூடைகள் பிடிபட்டன

வல்வெட்டித்துறை, திங். ஊர்காவற்றுறை சரவணை என்னுமிடத்திற் கள்ளக் கடத்தல் செய்வதற்காக கடற்கரையோரத்தில் வைக்கப்பட்டிருந்ததாக சந்தேகிக்கப்பட்ட 31 கராம்பு மூடைகளை காங்கேசன்துறை பொலிஸ் தலைமைப் பிரிவுச் சார்ஜன்ட் இன்ஸ்பெக்டர் திரு பி ராஜேஸ்வரன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் கைப்பற்றினர்.

சுமார் 50,000 ரூபா பெறுமதி வாய்ந்தது இக்கராம்பு மூடைகள்.

சந்தேகத்தின் பேரில் வெற்றிவேலு சுமரப்பிள்ளை என்பவரையும் கைது செய்து காங்கேசன்துறை சுங்கஇலாகாவில் ஒப்படைத்துள்ளனர்.

யாழ் சுங்கஇலாகா உதவிக் கலெக்டர் இதுபற்றி விசாரணை மேற்கொண்டுள்ளார்.

......

## பிரியாவிடை

முல்லைத்தீவு, திங்கள் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி முன்னிலை வித்தியானந்தாக் கல்லூரிக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ள திரு. ஏ. முத்தையாவுக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய ஆசிரியர்கள் பிரியாவிடை வைபவமொன்றை நடாத்தினர்.

யாழ்ப்பாண மாநகரசபை

கேள்வி அறிவித்தல்

1. ஆடு மாடுகள் வெட்டும் இடத்தில் இடித்த மாமிசத் திருத்தி விகைசித்தல் வேலைக்கு ரூபா இருபத்தையாயிரத்திற்கு (25,000/-) குறையாமல் மாநகரசபையில் பதிவு செய்த கொந்தராத்துக்காரர்களிடமிருந்து 28-7-72 நண்பகல் 12-00 மணி வரை கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விக்காரர் அன்று வரும் கேள்விகள் திறக்கப்படும் 28-7-72 பி. ப. 3-30 மணிக்கு எனது அலுவலகத்திற் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

3. யாழ். மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடம் 26-7-72 நண்பகல் 12-00 மணி வரை ரூபா 50/- மேற்படி வேலைக்கு கேள்வி வைப்புப் பணமாகவும் ரூபா 10/- படிவப் பெறுமதியாகவும் செலுத்திப் பெறப்படும் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக்கொடுக்கப்படும்.

5. எல்லாக் கேள்விகளும் அரக்கு முத்திரையிடப்பட்டு இணைப்பிரதிகளுடன் கடிதமாக இருத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் "ஆடுமாடுகள் வெட்டும் இடத்தில் இடித்த பகுதிகள் திருத்தல்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. மேல் விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. தி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்.

மாநகரசபை மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
14-7-72. 4301

## சங்கச் செய்தி

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை ஆத்திசூடி சகாய நிதிச் சங்கத்தின் 17-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: முதலியார் செ. முத்துத்தம்பி, உபதலைவர்: த சீனிவாசகம், காரியதரிசி: இ சோமலிங்கம், உபகாரியதரிசி: அ சோமாஸ்கந்தா, தனாதிகாரி: டாக்டர் வ த பசுபதி, உபதனாதிகாரி: வி. எம் கே சோமசுந்தரம் நிர்வாகசபை உறுப்பினர் 15 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

—...

## ராஜினாமா

சங்கானை, திங்கள் சங்கானை மநோ. கூ. சங்கத்தின் உபதலைவராகக் கடமையாற்றிய திரு எஸ். சிவகுரு தமது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

# சீன - இந்திய உறவை சீராக்க இலங்கைமூலம் முயற்சி





## இந்திரா - சூ. என். லாய் விரைவில் சந்திக்கலாம்

புதுடில்லி, ஜூலை 17

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே இருந்துவரும் மனக் கசப்பை நீக்கி இரு நாடுகளுக்குமிடையில் மீண்டும் உறவுகளைச் சீர்செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக ராஜீய வட்டாரங்களில் கூறப்படுகிறது.

விரைவில் இந்திய சீன அதிகாரிகளுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது.

இரு நாடுகளுக்குமிடையில் விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை இந்தியாவும் சீனாவும் மேற்கொண்டு வருவதாகவும் ராஜீய வட்டாரங்கள் கூறுகின்றன.

சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் உறவுகளைச் சீராக்குவதற்கான முயற்சிகள் இலங்கைமூலம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவுடன் உறவுகளைச் சீராக்குவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு சீன விருப்பம் கொண்டுள்ளதாக இலங்கை மூலம் இந்திய அரசுக்கு சீன தெரிவித்திருப்பதாகவும் சீனாவுடன் உறவைச் சீர்செய்வதற்கு இந்தியா எப்பொழுதும் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் திருமதி காந்தி சென்ற வாரமும் தெரிவித்திருந்தாரென்றும் கூறப்படுகிறது.

சீனாவுடன் எந்தவித நிபந்தனையுமின்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் ராஜீய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் இச்செய்தி கள்பற்றி எதுவும் கூற இந்திய அரசு அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இந்த முயற்சிகள் வெற்றி யளித்தால் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் சீனப்பிரதமர் சூ-என்-லாயும் சந்தித்துப் பேசுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## பூட்டோவின் சமரசத்திட்டம்

### உருதுபேசுவோரில் ஒரு பகுதியினர் நிராகரித்தனர்

கராச்சி ஜூலை 17

பாகிஸ்தானில் சிந்தி, உருது மொழி பேசுவோருக்கிடையில் ஏற்பட்ட மொழித் தகராறுக்கு அதிபர் பூட்டோ உருவாக்கிய சமரசத் திட்டத்தை உருது மொழி பேசுவோரில் ஒரு பகுதியினர் நிராகரித்துள்ளனர்.

இதேசமயம் மாகாண சட்டசபை நிறைவேற்றிய சிந்தி மொழி மசோதாவுக்கு மாகாண கவர்னர் அங்கீகாரமளித்துள்ளார்.

இந்த மசோதாவின்படி சிந்தி மாகாணத்தில் சிந்தி மொழி மட்டுமே உத்தியோக மொழியாக இருக்கும்.

இந்த மசோதாவை எதிர்த்து உருது மொழி பேசுவோர் ஆர்ப்பாட்டம் தொடங்கினர் இதன் விளைவாக சிந்தி மொழி பேசுவோருக்கும் உருது மொழி பேசுவோருக்குமிடையில் கலகம் ஏற்பட்டது. இதில் பதினைந்து பேர் கொல்லப்பட்டனர் நிலைமையைச் சமாளிக்க கராச்சிப் பகுதியில் பல இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. துருப்புக்களும் அழைக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து சிந்தி மொழி பேசும் மக்களினதும் உருதுமொழி பேசும் மக்களினதும் பிரதிநிதிகளை அழைத்துப் பூட்டோ பேச்சுவார்த்தை நடத்தினார் இதன் பின் சமரசத் திட்டமொன்றையும் அறிவித்தார்.

சிந்தி மொழியைக் கற்றுக் கொள்வதற்கு உருது மொழி பேசுவோருக்கும் பன்னிரண்டு வருட கால அவகாசம் கொடுப்பதென்றும் இந்தப் பன்னிரண்டு வருட காலத்துக்குள் சிந்தி மொழியில் தேர்ச்சி பெறுவதற்காகவோ உருதுமொழி தெரியாததற்காகவோ எவரும் பாகுபாடு காட்டப்படமாட்டாதென்றும் சமரசத் திட்டம் கூறுகிறது.

## லிபியாவின் புதிய மந்திரிசபை பதவியேற்றது

### கேணல்கடாபி பிரமாணம்செய்துவைத்தார்

திரிப்பொலி, ஜூலை 17

லிபியா அதிபர் கேணல் கடாபி முன்னிலையில் லிபியாவின் புதிய மந்திரிசபை நேற்றுப் பதவியேற்றது.

இரு இராணுவத்தினர் உட்பட பதினெட்டுப்பேர் அங்கம் வகிக்கும் புதிய மந்திரி சபை நேற்றுப் பதவியேற்ற வைபவத்தை லிபியா டெலிவிஷனில் லிபியா மக்கள் பார்த்தனர்.

சென்றவாரம் லிபியாவில் திடீர்ப்புரட்சி ஏற்பட்டதாகவும் லிபியா அதிபர் கேணல் கடாபி கைது செய்யப்பட்டாரென்றும் சுட்டுக் கொல்லப்பட்டாரென்றும் வதந்திகள் அடிபட்டன.

நேற்று புதிய மந்திரிசபைக்கு கேணல் கடாபி பதவிப் பிரமாணம் செய்துவைத்த நிகழ்ச்சி இந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்தது

இதற்கு முன்பாக கேணல் கடாபி பற்றிய வதந்தி பரவியதும் எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தும் சூடான் சிரியா அதிபர்களும் திரிப்பொலிக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேணல் கடாபியுடன் பேசினர் கடாபி பற்றிய வதந்தி ஆதாரமற்றவை என்று அவர்கள் பின்னர் அறிவித்தனர்.

லிபியா மந்திரி சபையில் அங்கம் வகித்தவர்களில் பலரும் புதிய மந்திரிசபையிலும் இடம்பெற்றுள்ளனர்.

சலாம்ஜலூத் லிபியாவின் புதிய பிரதமராகப் பதவி பேற்றுள்ளார்.

## பாகிஸ்தானில் அடுத்த உச்சிமகாநாடு

கல்கத்தா, ஜூலை 17

சிம்லா ஒப்பந்தம் சம்பந்தமாக பங்களாதேஷ் பிரதமர் ஷேக்முஜிபுர் ரஹ்மானிடம் நிலைமையை விளக்கி கூறுவதற்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேஷ காரிய தரிசி திரு. பி. என். தர் இன்று டாக்கா போய்ச் சேர்ந்தார்.

இந்தியா — பாகிஸ்தான் தலைவர்களுக்கிடையிலான இரண்டாவது உச்சிமகாநாடு இவ்வருடம் செப்டம்பர் மாதம் பாகிஸ்தானில் நடைபெறுமென்று திரு. தர் டாக்கா செல்லும் வழியில் கல்கத்தாவில் தெரிவித்தார்.

இரண்டாவது உச்சிமகாநாட்டுக்கு முன்னர் பங்களாதேஷ் பாகிஸ்தான் அங்கீகரிக்குமென எதிர்பார்ப்பதாகவும் திரு. தர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா வங்கப்பிரதமர் ஷேக் முஜிபுருக்கு ஒரு கடிதமும் அனுப்பியிருக்கிறார்.

---

### 403-வது சுவீப் சீட்டிழுப்பு

கொழும்பு, செவ்

தேசிய லொத்தர் சபையினரால் நடாத்தப்படும் 403-ம் இலக்க தேசிய லொத்தர் சீட்டிழுப்பு இன்று மாலை கொள்ளுப்பிட்டியில் உள்ள தேசிய லொத்தர் சபை அலுவலகத்தில் நடைபெறும்

## சிங்கள வித்தியாலயத்தில் இந்துசமயபாடம்!

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் பௌத்தத்திற்கு பதிலாக இந்துசமயபாடத்தை வரும் க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கு எடுப்பதற்கு இவ் மாணவர்களுக்கு கல்லூரி அதிபர் திரு. எதிர்வீரா அனுமதி வழங்கியுள்ளார். இவ்வளவு காலமும் இங்கு பயிலும் தமிழ்மாணவர்கள் பௌத்தத்தை ஒரு பாடமாக எடுக்கவேண்டியிருந்தது. இவ்வாண்டிலிருந்து இக்கஷ்டம் தமிழ் மாணவர்களுக்கு நீங்கியுள்ளது.

அத்துடன் சிங்கள வித்தியாலயத்தில், கல்லூரியின் சரித்திரத்திலேயே முதற்தடவையாக இந்து மாணவர் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதனை இங்கு பயிலுகின்ற தமிழ் மாணவர்கள் முன்வந்து செய்தனர். தலைவராக செல்வி வி. ஜயலக்ஷ்மியும், காரியதரிசியாக செல்வி த. ஜானகியும் தெரிவு செய்யப்பட்டனர்.

### சாப்பாட்டுப் பிரியர்கள் யார்?

நியூயோர்க், ஜூலை 17

"ஐரிஷ் மக்கள் அதிகம் சாப்பிடுகிறார்கள்.

அமெரிக்கர் பியர் அதிகமாகக் குடிக்கிறார்கள்.

சுவிஸ் மக்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள்.

ஸ்பெயினர்கள் மணமுடிப்பதில் முன்னுக்கு நிற்கிறார்கள்."

ஐ. நா. புள்ளிவிபரம் ஒன்று மேற்கண்ட தகவல்களைத் தெரிவிக்கிறது?

# முன்னேற்றத்துக்கான தடை நீங்கிவிட்டது!

— பிரதமர்

கொழும்பு, திங்கள் "காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கடும் சேவைகளை மக்கள் அரசாங்கம் பின்பற்றி அதனுடன் குறிப்பிடக்கூடிய நாடுகளின் மதிப்பைப் பெற்றிருக்கிறது. இதனால் எங்கள் நாட்டுக்குச் சிறுவிடமிருந்து நீண்ட கால உதவி கிடைத்திருக்கிறது."

இவ்வாறு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

இலங்கைக் குடியரசின் முதலாவது பிரதமராகப் பதவியேற்றதைப் பாராட்டு முகமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இக்கூட்டத்தை நடாத்தியது. புதிய நகர மண்டபத்தில் இக்கூட்டம் நடந்தது.

நீர்ப்பாசன அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா கூட்டத்திற்கு தலைமை வகித்தார். புதிய குடியரசை உருவாக்கியதற்காகவும் பிரதமருக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும் இக்கூட்டம் ஏற்பாடாகியிருந்தது.

பிரதமர் மேலும் பேசுகையில் காலஞ்சென்ற பிரதமர் திரு பண்டாரநாயக்காவே புதிய அரசியல் திட்டம் ஏற்படுவதற்கு அத்திவாரமிட்டார். புதிய அரசியல் சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு மந்திரிசபை உப குழு ஒன்றையும் அவர் நியமித்தார். புதிய குடியரசு ஏற்பட்டதற்கு முதலில் அரசியல் விவகார அமைச்சருக்கும் அமைச்சின் ஊழியர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கவேண்டும். ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் இதற்காக மனப்பூர்வமான நன்றி தெரிவிக்கிறேன். பழைய அரசமைப்பு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரிய முட்டுக்கட்டையாக இருப்பதை உணர்ந்தோம். புதிய அரசியல் சட்டம் ஒன்றை நாட்டுக்கு அளிப்பதென்று கூட்டு முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு உறுதியளித்தது. இந்த வாக்குறுதி அளிக்கப்பட்டு இரண்டு வருட காலத்தில் புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஸ்ரீலங்கா உதயமானது. புதிய குடியரசு உதயமானதால் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு தடையாக இருந்துவந்த தடை நீங்கிவிட்டது. இப்போது எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியமாகின்றது. இவ்வாறு பிரதமர் கூறினார்.

## நெருப்புக் காய்ச்சல் அபாயம்

பருத்தித்துறை, திங்கள் வடமராட்சிப் பகுதியில் சமீப காலத்தில் ஏற்பட்ட நெருப்புக்காய்ச்சல் பரவலைக் காணப்படுவதாலும், சிலர் மரணமடைந்துள்ளதாலும் இப்பகுதியில் உள்ள கிணறுகள் குளோரின் போன்ற விஞ்ஞான அமிலங்களால் சுத்திகரிக்கப்படுகின்றன. தடுப்பு நோய்ச் சிகிச்சைகளும் மருத்துவப் பகுதியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சிறு கதை நாடகப் போட்டி

குருநகர், திங்கள் குருநகர் கலைக்கதிர் மன்றத்தின் 5வது ஆண்டுவிழா அடுத்த மாதம் குருநகரில் கொண்டாடப்படவிருக்கிறது.

இவ்விழாவிற்கான கலை இலக்கியப்போட்டிகள் யாழ் மாவட்ட ரீதியாக நடைபெறவிருக்கின்றன. இப்போட்டிகளில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல மாணவர்களும், கல்லூரிகளும் தனிப்பட்டவர்களும் கலந்து கொள்ளக்கூடியதாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நாடகப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியவற்றுடன் விளையாட்டுப் போட்டிகளும் இவ்விழாவில் இடம்பெறுகின்றன. போட்டிகளில் தெரிவானவற்றுக்குத் தங்கப் பதக்கங்கள், வெள்ளிக் கிண்ணங்கள் முதலியன வழங்கப்படவுள்ளன. விழாவிற்கான இலக்குநர் குழுவில் மன்றத் தலைவர் திரு. ம. கருணாகரன், செயலாளர் திரு. ஜோன். பொன்ராசா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## 3 பெண்கள் மீது திருட்டு வழக்கு

அனுராதபுரம், திங்கள் பட்டப் பகலில் வீடு உடைத்து விலை உயர்ந்த சேலைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்த ஒரு பெண்கள் கோஷ்டியை வவுனியா மாஜிஸ்திரேட் தலா 500 ரூபா பிணையில் விடுதலைசெய்தார்.

வவுனியா பாவற்குளத்தைச் சேர்ந்த ரூசலின் நோனா என்பவரது வீட்டை உடைத்துக் கொள்ளையடித்துக் கைவெடுத்த பொருட்களுடன் காட்டில் ஒளித்திருந்தபோது பொலிஸார் 3 இளம் பெண்களைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து காவலில் வைத்தனர்.

இவ்வழக்கை விசாரணை செய்த வவுனியா மாஜிஸ்திரேட் எதிரிகளாகிய கே. விமலாவதியையும், எஸ். விமலாவதியையும், சுகுமாரதியையும் தலா 500 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு வழக்கை இம்மாதம் 26ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## உற்சவம்

யாழ்ப்பாணம், செவ் வடக்கு நாரந்தனை திருஇருதய ஆண்டவர் தேவாலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் ஆராதனைகள் நடைபெற்று திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் உற்சவம் முடிவடையும்.

## "முதலாளி சொல்லித் திருடினேன்"

யாழ்ப்பாணம், செவ் "நான் இத்திருட்டில் பங்கு கொண்டது உண்மை. ஒரு வீட்டில் திருடவரும்படி முதலாளி என்னை அழைத்தார். நான் அங்கு சென்றேன். பணிக்கையும் பெட்டியைத் தூக்கிவந்தேன். நானும் மற்றும் இரு எதிரிகளும் ஒருவருடைய வீட்டிற்கு அப்பெட்டியைக் கொண்டு சென்றோம். களவாடப்பட்ட பொருள்களைப் பகிரும்போது நேரத்தில் முதலாளியின் மகன் வந்து என்னை வெளியே தள்ளிவிட்டார். இத்திருட்டினால் நான் ஒரு சதமும் பயனடையவில்லை."

திருட்டு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த நாரந்தனை குருநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஊர்காவற்றுறை நீதிபதி திரு கொலின் கெண்டி முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் நீதிபதியைப் பார்த்து சிங்கள மொழியில் இவ்வாறு கூறினர்.

இவ்வழக்கில் நாரந்தனை குருநகரைச் சேர்ந்த இருவரும் புங்குடுதீவைச் சேர்ந்த இருவரும் புங்குடுதீவில் ஒரு வீட்டில் பவுண் நகைகள், சேலைகள் ஆகியவற்றை திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

## 'இளைஞர்களிடையே விழிப்புணர்ச்சி'

அல்லைப்பிட்டி, திங்கள் "இன்றைய இளைஞர்கள் மனோதைரியம், நற்செயல்கள் போன்றவற்றில் ஈடுபாடுடைய நற்பிரஜைகளாய் வாழ முற்படவேண்டும். அப்போது தமது நாட்டிற்கும் தமது சமுதாயத்திற்கும் நல்ல பலன் கிட்டும். தற்போது மாணவர்கள் மத்தியிலே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருவது நமக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது".

மேற்கண்டவாறு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்துப் பேசும்போது அதிபர் திரு. இ. இராஜநாயகம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், தென்னிலங்கை மாணவருடன் வடமாகாண மாணவர்களை ஒப்பிடும் பார்க்கும்போது விளையாட்டுத் துறையிலும்சரி, கல்வியிலும் சரி நமது வடஇலங்கை மாணவர்கள் சிறந்தவர்களாக விளங்குகின்றனர். இதற்குச் சான்றாக கல்வி அமைச்சரே பாராட்டித் தெரிவித்துள்ளார். வடமாகாணத்திலுள்ள மிகப்பெரிய கல்லூரிகளில் இக்கல்லூரியும் ஒன்றாகும். இங்கு 1500க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதிலிருந்து இக்கல்லூரி வளர்ச்சி தெரிகின்றது. மாணவர்கள் மாத்திரமல்ல பெற்றோர்களும், ஆசிரியர்களும் இக்கல்லூரியின் முன்னேற்றத்திற்கு பெரிதும் பாடுபடவேண்டும் என்றார்.

## 'அவர்களே ஒற்றுமையேற்படக் காரணமாக இருந்தார்கள்'

யாழ்ப்பாணம், செவ் இளைஞர்கள் தாமிருக்கும் நாடு அடிமைப்பட்டுவிடும். தமிழ் இளைஞர்கள் தமது மொழிக்கு இழைக்கப்பட்ட கொடுமைகண்டு போர்க்கொடி உயர்த்திவிட்டார்கள். இளைஞர்களின் உணர்ச்சியை நன்கு அறிந்தவன் நான்.

இவ்வாறு மட்டக்களப்பு முதலாவது எம்.பி திரு செ. இராசதுரை யாழ் வேம்படி மைதானத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

திரு இராசதுரை எம்.பி மேலும் பேசுகையில்: தமிழ் மக்கள் மத்தியில் இன்று இத்தகைய ஒற்றுமை ஏற்படக் காரணமாக இருந்தவர்கள் சிங்கள அரசியல் தலைவர்கள்தான். அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் தான் இந்த ஒற்றுமையை ஏற்படுத்தின.

கடந்த காலங்களில் நடந்த முடியாத பல சம்பவங்களும் கட்டங்களும் ஓட்டாது என்றவர்கள் இன்று ஒன்றுபட்டிருப்பதைக் கண்டு திகைத்துவிட்டனர். கிளிநொச்சி எம்.பி திரு வீ. ஆனந்தசங்கரி பேசும்போது கட்சியில் இருப்பவர்களுக்கும் எனக்கும் நிறைய வேற்றுமை உண்டென்றும் தமிழ் மக்கள் தமது உரிமைக்காக எந்த விதமான தியாகத்தையும் செய்யத் தயாராகிவிட்டனர் என்றும் சொன்னார்.

திரு ஆனந்தசங்கரி பேசிக்கொண்டிருக்கையில் மழை பெய்ய ஆரம்பித்தது. மழையைப் பொருட்படுத்தாது அவர் பேசிக்கொண்டிருந்தார். (சி)

## 'அமைதியற்ற வாழ்வின் பலனை மறுபிறப்பில் அனுபவிப்போம்'

சங்கானை, திங்கள் 'கத்துக்கள், பட்டாசுகள், வேடிக்கைகள் போன்ற ஆக்கத்திற்கு ஒவ்வாத செயல்களில் மக்கள் ஆழ நாட்டம் கொண்டு உள்ளம், உடல், மன அமைதி என்பவற்றை இழந்த நிலையில் காலத்தை வீண் போக்குதலை 'சமாறு' என சமயப் பெரியார்கள் கூறுகின்றனர். இவை போன்றவற்றில் ஈடுபடுவோர் இவற்றின் ஏற்படும் பலாபலன்களை மறுபிறப்பில் அனுபவிக்கவேண்டியே நேரிடும்''

இவ்வாறு திரு. கே. நடராசா மண்டைத்தீவு இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மணிவாசகப் பெருமானார் விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், பெரும்பான்மையானோர் தாம் இதுவரை சென்றபாதை 'சமாறு' என்பதை உணர்ந்தபின் தான் ஆத்மீக ஈடேற்றத்திற்கும் ஆன்மாவை ஈடேற்றுவதற்கு செய்வதுமான 'ஆமாறு' வழியைச் சிந்திக்கின்றனர். இப்பிறவியில் நாம் அனுபவிப்பது முற்பிறவியில் செய்த பிராரத்துவம். எனவேதான் மறுபிறப்பின் துன்பத்தை அனுபவிப்பதற்கான 'சமாறு' வழியில் செல்லாது இன்றிலிருந்தே ஆத்மா ஈடேற்றத்திற்கான பேரின்பத்தை அடைவதற்கான சகல தாழ்வினை சேர்வதற்கான 'ஆமாறு' வழியில் திறம் வேண்டும்; இதற்கு மானிடப்பிறவி பெற்ற ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய நித்திய கடமைகளாகும். இதனை மணிவாசகரும் எமக்கு அருளிச் சென்ற பொன்மொழிகளாகும்.

திரு. கே. சேதுராசா: 'திருவாசகத்தேன்' என்னும் பொருள் பற்றி பேசுகையில் தேன் தானும் கெடாது சேர்ந்தவர்களையும் கெடுக்காது. இதேபோல் மணிவாசகரின் திருவாசகத்தேன் பருகும் மாக்கள் சுவையுடன் ஞானஒளி தரும் என்றும் மாணவர்களாகிய நீங்கள் இதை இன்றே பயின்று கொள்வது மிகச் சாலச் சிறந்தது. இதன் அருமை பெருமைகளை காலப் போக்கில் உணர்ந்து கொள்வீர்கள் என்றும் சொன்னார்.

## 'சண்' பதவி நீக்கம்

அட்டன், திங்கள் சீனச் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தின் புதிய தலைவராக அதன் உப தலைவராக இருந்து வந்த ருசலியோ பெர்னாண்டோ ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அட்டன்-டிக்கோயா நகரசபை புதிய மண்டபத்தில் சங்கத்தின் டெலிகேட்டுகள் மகாநாடு சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றபோது சங்கத் தலைவர் பதவியிலிருந்த திரு. என். சண்முகதாசன் நீக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

## படம்பிடித்தனர்

யாழ்ப்பாணம், செவ் சாவகச்சேரி வடக்குப் பிரதேச சேவையாளர் பிரிவில் அடையாள அட்டைகளுக்கான புகைப்படம்பிடிப்புகள் நடைபெற்றன. 137 பேர் இங்கு காலையிலிருந்து மாலை வரை படம்பிடிக்கப்பட்டனர். (கு. வி. ம.)

## புலமைப் பரீட்சையில் சித்தி

கிளிநொச்சி, திங்கள் வைத்திலிங்கேஸ்வர வித்தியாசாலையிலிருந்து ஏழாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வன் கே. பழனிநாதன், இரத்தினசாமி, செல்வி வி. விஸ்வராணி ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

0 0 0

ஊர்காவற்றுறை, திங்கள் சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலைச் செல்வி க. ஆனந்தி இப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

